**Published on 14, Jan-2025** **ISSN: 3049-2688 (Online)**

# பண்டிதை விசாலாட்சி அம்மாளின் ஆநந்தமஹிளா புதினத்தில் பெண் முன்னேற்றம் பற்றிய சிந்தனைகள்

இரா. கோகிலவாணி
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்

முனைவர் மு. வையாபுரி
நெறியாளர், உதவிப் பேராசிரியர்
தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை – 15.

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

## ஆய்வுச் சுருக்கம்

இறைவன் படைப்பில் உருவான தாவரங்கள், பூச்சிகள், ஊர்வன, பறவைகள், விலங்குகள் இந்த நிரலில் மனித இனம் முழு பரிணாம வளர்ச்சி அடைந்த ஓர் உயிரினம் ஆகும். மனித இனத்தை ஆண், பெண் என இரு வகையாகப் படைத்திருப்பது இனப்பெருக்கத்திற்காக மட்டுமே தவிர வேறெந்த உயர்வு தாழ்ச்சியும் அவர்களுக்குள் இல்லை. ஆனால் இன்றுவரை பெண் என்பவள் ஆணை விடக் கீழானவளாகவே உலகத்தாரால்பார்க்கப்பட்டு வருகிறாள். அவளுக்கான இயல்பான உரிமைகள் கூட மறுக்கப்பட்டு வருகின்றன. இந்த உரிமை மறுப்பு அவளுக்கான அடிப்படைக் கல்வியைக் கூட தர மறுக்கிறது. பெண்களை ஆண்களுக்கு இணையாக மதிக்கும் சமூகமே மேன்மையுறும். இத்தகைய கருத்துகள் இன்று பெண்ணியம் என்ற வகையில் பெரிதாக பேசப்பட்டு வருகிறது. ஆனால் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழில் முதல் பெண் எழுத்தாளர் எனக் கருதப்படும் பண்டிதை விசாலாட்சி அம்மாள் எழுதிய ஆநந்தமஹிளா என்னும் புதினத்தில் இத்தகைய கருத்துகள் எங்ஙனம் விரவிக் கிடக்கின்றன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திறவுச் சொற்கள்

பெண் முன்னேற்றம், பெண்கல்வி, திருமண உரிமை.

## முன்னுரை

பெண்களுக்குக் கல்வியறிவு வேண்டும் என்பது புதியதொரு சிந்தனை அல்ல. மொழிகள் தோன்றிய போதே, கல்வி என்பது அனைவருக்கும் புகட்டப்பட்டது. பண்டைய காலத்தில் தமிழில் ஆண்களுக்கு இணையாக இல்லாவிடினும் ஔவையார் போன்ற சிறந்த பெண்பாற் புலவர்கள் வாழ்ந்து வந்தனர். அறம் செய விரும்பு, ஆறுவது சினம் போன்ற அறச்சிந்தனைகள் கொண்ட நூல்கள் பல இவர்களால் இயற்றப்பட்டன.ஆனால் அதன்பின் வந்த காலங்களில் பெண்களுக்கான கல்வி தரப்படவில்லை. பெண்கள் வீட்டை விட்டு வெளியே வர இயலாது. சமையலறை மட்டுமே அவர்களுக்கான இடமாக இருந்தது. குடும்பத்தில் முதன்மை முடிவுகள் எடுக்கும் உரிமைகளும் அவர்களுக்கு கிடையாது. எனினும் அக்காலத்திலேயே பெண் முன்னேற்றம், பெண் கல்வி பற்றி தனது புதினத்தில் ஆசிரியர் எங்ஙனம் அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறார் என்பதையும், அம்மையாரைப் பற்றியும் கட்டுரையில் காணலாம்.

## பண்டிதை விசாலாட்சி அம்மையாரின் இளமைப்பருவமும் எழுத்துப் பணிகளும்

பண்டிதை விசாலாட்சி அம்மையார் தான், தமிழில் எழுதிய, முதல் பெண் எழுத்தாளர் மற்றும் இதழாசிரியர் ஆவார். இவர் மைசூரில் 1881ஆம் ஆண்டு வெங்கட்ராம ஐயருக்கும், சுப்புலட்சுமி அம்மையாருக்கும் பிறந்தார். பதினான்கு வயதில் இளம் விதவையானார் விசாலாட்சி அம்மாள். அதன்பின் கல்வி கற்று, பட்டம் பெற்றார். லோகோபகாரி என்னும் இதழில் செய்திகளையும், சிறு கதைகளும் எழுதி வந்தார். மைசூரிலிரு க்கும் போது, அம்மையார் தனது முதல் நாவலான லலிதாங்கி புதினத்தை (1902) எழுதி லோகோபகாரி இதழுக்கு அனுப் பினார். இதழாசிரியரான வி. நடராஜ ஐயர், புதினத்தைத் தமது பெயரில் வெளியிட்டார். அப்புதினத்திற்குக் கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து விசாலாட்சி அம்மையார் தனது இரண்டாவது நாவலான ஜலஜாக்ஷியை எழுதுகிறார். இதுவும் நடராஜ ஐயர் பெயரிலேயே வெளிவந்து பெரியளவில் வரவேற்பைப் பெற்றது. அதன் பின் எழுதிய புதினங்கள் நேரடியாக பண்டிதை விசாலா ட்சி அம்மையாரின் பெயரிலேயே வெளி வந்தன. மேலும் அவர்1926 வரை கிட்டத் தட்ட முப்பது புதினங்கள் எழுதியருக்கிறார்.

இதற்கிடையில் லோகோபகாரி இதழின் உதவியாசிரியராகவும் ஆகிறார். 1908இல் லோகோபகாரி இதழாசிரியர் வி. நடராஜ ஐயர் இறந்து விடுகிறார். அவருக்குப் பின் பண்டிதை விசாலாட்சி அம்மாள் இதழா சிரியர் ஆகிறார். ஆனால் அங்கு நிகழ்பவை கள் தமக்கு ஒத்துவராததால், பொறுப்பிலி ருந்து விலகித் தனியே ஞானச்சந்திரிகா மற்றும் ஹிதகாரணி என்னும் இரு இதழ்களைத் தொடங்கி நடத்தி வந்தார். இவரது எழுத்துப் பணியினைப் பாராட்டி, மைசூரிலுள்ள சிருங்கேரி மடம் 'பண்டிதை' என்னும்பட்டம் வழங்கியது. பண்டிதை பட்டத்திற்கு பின், பண்டிதை என்ற அடைமொழி இல்லாமல் அவர் எந்தப் படைப்பையும் எழுதியதில்லை. 1926இல் அவர் மறைந்து விட்டார். இத்தனை பணிகள் எழுத்துலகில் புரிந்திருந்தாலும், தமிழிலக்கிய உலகில் அவருக்கான இடம் இன்னும் தரப்படவில்லை என்பது இங்கு பதிவு செய்யப்பட வேண்டியது.

### ஆநந்தமஹிளா (ஆறாவது புதினம், 1903,1908, 2 பதிப்புகள்)

பண்டிதை விசாலாட்சி அம்மாள் தனது ஆறாவது புதினமான ஆநந்தமஹிளாவை அரசர் காலத்து கதையாக எழுதியிருக் கிறார். பெண்களுக்கான உரிமை பற்றிய பல கருத்துகளை இப்புதினம் முழுதும் எழுதியி ருக்கிறார். கதையில் பெண் பாத்திரங்களே முதன்மை பாத்திரங்களாக அமைக்கப் பட்டுள்ளன. கதையின் தலைப்பும் பெண்ணின் பெயரைத் தாங்கி வருகிறது. ஆதலால் பண்டிதை விசாலாட்சி அம்மாள் தான் எழுதும் புதனங்களில் பெண்களை முன்னிலைப் படுத்தியே எழுதியுள்ளார் என்பது புலனாகிறது. மேலும் பெண்கள் உள்ளத் தில் மட்டுமல்ல உடலளவிலும் வலிமை கொண்டவர்கள் என்பதை கதையின் நாயகியான ஆநந்தமஹிளா, மற்ற பாத்திரங்களான வாஜாக்ஷி, மாதங்கினி, இவர்களின் போர்த்திறமைகளைப் பற்றிக் கூறுவதன் மூலம் தெளியப்படுத்துகிறார்.

### உள்ளடக்கக் கூறுகள்

ஒரு புதினத்தில் கதைக்கரு, கதைத் தலைப்பு, கதைப்பின்னல், கதைமாந்தர் கள், கதை நிகழும் இடம், கதை நிகழும் காலம், உத்திகள், மொழிநடை என்னும் எட்டு உள்ளடக்கக் கூறுகள் உள்ளன.

### கதைச்கரு மற்றும் கதைத்தலைப்பு

ஆநந்தமஹிளாவில் இரண்டு இரட்டைக் குழந்தைகள் பிறந்து, அவைகள் பிரிக்கப் படுகின்றன. பின்னர் அவர்கள் ஒவ்வொரு வரும் தனித்தனியே வளர்க்கப்பட்டு இறுதியில் எங்ஙனம் இணைகின்றனர் என்பதே இக்கதையின் மூலக்கரு. ஆநந்த மஹிளா, தேவிசிம்ஹன், வாஜாக்ஷி, அமர ஸிம்ஹன் இப்படி இரட்டையர்களாக பிறந்த இந்த இரு இணையரும், இறுதி யில் மாற்றி மாற்றி திருமணமும் செய்து கொள்கின்றனர். அதாவது ஆநந்தமஹி ளாவை அமரஸிம்ஹ னும், வாஜாக்ஷியை தேவிஸிம்ஹனும் திருமணம் செய்து கொள்கின்றனர். இவர்

களது பிறப்பு முதல் திருமணம் வரை இடையே நிறைய கதைத்திருப்பங்களுடன் கதை நகர்கிறது.

ஆநந்தமஹிளாவின் கதைதான் என்றா லும், நிறைய கிளைக் கதைகளையும் இதனுடன் இணைத்து எழுதியுள்ளார்.

### கதைப்பின்னல் மற்றும் கதை மாந்தர்கள்

ஆநந்தமஹிளா கதை ஆரம்பிப்பது வாஜாக்ஷி மற்றும் ஜயமாலினியின் கானகத்திலுள்ள அரண்மனையிலிருந்து. அங்கு அவள் பெண் களுக்கென்று தனியே ஒரு ஸமாஜம் நடத்தி, அவர்களை வழிநடத்தி வருவதிலிருந்து அவள் மிகச் சிறந்த தலைவி என்பதை வெளிப் படுத்துகிறார் ஆசிரியர். பதினாறு ஆண்டு களுக்கு முன்னால் ஸ்ரீரஞ்சனி என்னும் ஜயமாலினியும், ஐந்நூறு பெண்களும் கொடியவன் ஒருவனால் சிறைப்பிடிக்கப் பட்டவர்கள். ஜயமாலினி அவனிடமிருந்து இருநூறு பெண்களுடன் தப்பித்து, தான் பெற்ற பெண்ணான வாஜாக்ஷியுடனும், அப்பெண்களுடனும் காட்டில் வாழ்ந்து வரலானாள். வாஜாக்ஷி அவளுடைய பெண் என்பதால் அவளுக்கும் சிறந்து முறையில் கல்வியும் ஞானமும் அளித்து அறிவுடையவளாக வளர்த்து வருகிறாள். சிறைப்பட்ட மீதமுள்ள பெண்கள் பதினாறு ஆண்டுகளாகக் கொடுமைகளை அனுபவித்து வந்தனர். இறுதியில் தேவிஸிம் ஹன் மற்றும் அமரஸிம்ஹனால் காப்பற்றப் படுகின்றனர்.

ஆநந்தமஹிளா தன் போர்த்திறமையி னாலும், அறிவுத்திறமையினாலும் மற்ற அனைத்து அரசர்களுக்கும் அவளே இனி சக்ரவர்த்தினி என்னும் பெயர் பெறுகிறாள். மாதங்கினி அவ்வப்போது ஆண் சிப்பாய் போல் மாறுவேடமிட்டு டில்லி பாதுஷாவை ஏமாற்றி வருகிறாள். இதற்கிடையில் வரமாலினிதான் பெற்ற பிள்ளைகள், தன் சகோதரி மாதங்கினி மற்றும் கணவனைப் பிரிந்து காட்டில் தனியொருவளாய் வாழ்ந்து வருகிறாள். அவளைக் காட்டில் காணும் மாதங்கினி, தான் மட்டும் திருமணம் செய்து வாழ்ந்து வருவதையும், தன் சகோதரி இங்ஙனம் காட்டில் தனியாளாகவும் பதினாறு ஆண்டுகள் வாழ்ந்து வருவதை யும் எண்ணி அவளிடம் வருந்துகிறாள். பின்னர் வரமாலினிக்கு ஆறுதல் செய்தி யாக வரமாலினியின் மகன் தேவஸிம் ஹன் தன்னுடன் இருப்பதாகக் கூறுகிறாள்.

வாஜாக்ஷியும், ஆநந்தமஹிளாவும் கதை யின் இடையில் ஒன்றாக இணைகின்ற னர். இணைந்து மக்களுக்கு வேண்டியன செய்து, மக்களைக் காப்பாற்றி வருகின்றனர். ஒரு சில இடங்களில் தங்கள் போர்த் திறமை களையும் காட்டுகின்றனர்.

இவர்கள் அனைவரையும் இணைக்கும் ஒரு புள்ளியாக குருதேவர் அமைகிறார். இங்ஙனம் கதைப்பின்னலை முன் பின்னாக மிக அழகாகக் கோர்வையாக, அமைத்துள்ளார் ஆசிரியர்.

### உத்திகளும் மொழிநடையும்

ஆநந்தமஹிளா என்னும் புதினம் எடுத்துரையுத்தி, கருத்துப் புலப்பாட்டு உத்தி, முன்னோக்கு உத்தி, பின்னோக்கு உத்தி, நனவோடை உத்தி என்னும் உத்திகளில் அமைக்கப்பட்டிருக்கிறது. எழுத்தாளர் தாமே கதை சொல்லும் உத்தி யான **எடுத்துரை உத்தியைக்** கொண்டே தான் இப்புதினமும் அமைக்கப்பட்டு ள்ளது. கருத்துப்புலப் பாட்டு உத்தியின் மூலமே பெண் முன்னேற்றச் சிந்தனைகளை வெளிப் படுத்தியிருக்கிறார் ஆசிரியர். புதினம் முழுதும் வடமொழியும், தமிழ் மொழியும் கலந்து எழுதப்படும் மணிபிரவாள நடையிலேயே எழுதியிருக்கிறார்.

### பெண் முன்னேற்றச் சிந்தனைகள்

பெண்கள் ஆண்களுக்கு இணையாக மதிக்கப்பட, அவர்களுக்கு கல்வியும், விழிப்புணர்வும் வேண்டும். பொருளாதார விடுதலை வேண்டும். தனது வாழ்வு, திருமணம் பற்றி முடிவெடுக்கும் உரிமை வேண்டும். இவைகளை தடையின்றி தரும் சமூகமே பெண்களுக்கான இடத்தை முறையாகக் கொடுத்திருக்கிறது எனலாம்.

### பெண் கல்வி

பெண்கள் கல்வி கற்பதன் இன்றிய மையை

ஆசிரியர் தனது கருத்தாக இங்ஙனம் வெளிப் படுத்துகிறார்.

*“புருஷர்கள் நமக்குக் கல்வி கற்பிக்கட்டு மென்று காத்திருப்போமாயின் ஒரு காலும் அவ்வெண்ணம் நிறைவேறாது. தகப்பனுக்கு பெண்ணிடம் விசுவாச முண்டு. அதனால் புத்திருக்கு கல்வி கற்பிக்கிறான். மனைவி வித்யாவிஹீனை யாயிருக்கிறளென்று அவன் அதிகமாய் வருத்தப்படுவதில்லை. ஒருவேளை அவ்விதக் குறையிருந்தாலும், அதி சீக்கிரத்தில் அக்குறை குமாரியின் மூலம் நீங்கி விடும். ஆகையால் மனைவியின் வித்தை அவனுக்கு அவசியமில்லை யென்று ஏற்படுகிறது.” (ஆநந்தமஹிளா, பக்கம் 3)*

ஒரு வீட்டில் மனைவி படிக்காவிட்டால் அதைப்பற்றிக் கணவன் கவலைப்பட மாட்டான். ஏனெனில் அவனுக்கு மனைவி படிக்காததன் இன்றியமை புரிவதில்லை. மனைவி படித்திருந்தால் விளையும் நன்மை கள் பற்றித் தெரியவில்லை. ஆனால் அதுவே அவனுடைய மகளை எப்படியாவது படிக்க வைக்க எண்ணுகிறான். பெண் படித்தால் தான் அவளுடைய வாழ்வு மேன்படும் என்ற உண்மையை உணர்ந்தவனுக்கு மனைவி படிக்காததன்வரும் விளைவு புரிவதில்லை என்பதை ஆசிரியர் இங்கு தெளிவு படுத்துகிறார்.

மேலும் பெண்களுக்கு கல்வியை எப்படி புகட்ட வேண்டும் என்று கூறும் போது,

*“கல்வியென்னும் அமிருதத்தை பெண்கள் வாயில் தினம் ஒவ்வொரு பொட்டாய் ஊற்றி வந்தால் அதனுடையருசியை சில நாட்களுக்குள் அறிவார்கள். அவர்களுக்கு சொற்பஞானம் உண்டானதும் இரண்டு இரண்டு பொட்டாகக் கொடுக்க வேண் டும். இவ்விதம் ஒவ்வொரு ஸ்தீரிக்கும் செய்து வந்தால் பாரதகண்டம் என்ன நிலைமைக்கு வரும்! ஸ்தீரிகளுக்கு அக்ஷ்ரஞானம் வந்தவுடன் படிப்பை நிறுத்தி விடுவது சிலருடைய வழக்கம். இதனால் அநேக அநர்த்தங்கள் உண்டாகும்.” என்கிறார். (ஆநந்தமஹிளா, பக்கம் 30)*

அதாவது ஆசிரியர் கூற வரும் கருத்தா னது, அரைகுறையாகக் கல்வி கற்றால் அது அனைவருக்கும் கேடு என்கிறார். **‘கற்பவற் றைக் கசடறக் கற்று அதன் வழி நடக்க வேண்டும்’** என்னும் திருக்குறளின் கருத்தை யே இங்கு வலியுறுத்துகிறார் ஆசிரியர்.

## பெண் திருமணம் பற்றிய உரிமை

இன்றுவரை பெண்கள் தனக்கான திருமணம் பற்றிய முடிவுகளை எடுப்பது அவ்வளவு எளிதாக இல்லை. பெண் பெரியவளானதும் அவளுக்கு உடனே திருமணம் செய்ய வேண்டும் என்ற கடமை தமக்கிருப்பதாக பெற்றோர் வருந்துகின்றனர். பெண் திருமணம் வேண்டாம் என்றோ, சிறிது தள்ளிப் போட்டாலோ அவர்கள் நோய் வாய்ப் பட்டு இறந்தும் விடுகின்றனர். இதே போன்ற சூழல் ஆநந்தமஹிளா வாழ் விலும் நடைபெறுகிறது. அவள் தனது பெற்றோரிடம்,

*“அப்பா என்மேல் தயைசெய்து இந்த வார்த்தையை அங்கீகரியும். எனக்கு விவாகம் வேண்டாம். உங்களுக்கு செய்தை தீர வேண்டுமென்றால் என்னோடு வாதம் செய்து எவன் ஜெயிக்கிறானோ அவனை எனக்குக் கணவன். இதற்குச் சம்மதமிருந் தால் செய்யலாம்” என்றாள். (ஆநந்தமஹிளா, பக்கம் 24)*

இருந்தும் யாரும் அவளுடன் வாதம் செய்ய வரவில்லை என்பதால் மனம் நொந்து தந்தையும், தாயும் இறந்து விடுகின்றனர். தனியாளாய் நிற்கும் அவளைக் குருதேவர் அழைத்துச் சென்று, மேலும் கல்வியும், ஞானமும், போர்முறையும் கற்றுக் கொடுத்து, சிற்றரசர்களுக்கெல்லாம் சக்ரவர்த்தினி ஆக்குகிறார். அமரஸிம்ஹன் என்னும் வீரனையும் இறுதியில் திருமணம் செய்து வைக்கிறார்.

## பெண்களுக்கு வேண்டிய துணிவு

உலகவாழ்வில் பெண்களுக்கு மட்டுமல்ல அனைவருக்கும் வேண்டியது துணிவும், முடிவு எடுக்கும் திறனும் ஆகும். இப்புதினத்தில் மாதங்கினிஸிப்பாய் போல ஆண்வேடமிட்டு, டில்லியிலுள்ள பாதுஷா வைக் கண்டு, அவன் நம்பிக் கையைப் பெற்று அவனை ஏமாற்று கிறாள்.

ஆநந்தமஹிளா மற்றும் வாஜாக்ஷி போருக்குச் சென்று வெற்றி பெறுவதைத் தன் கதையில் குறிப்பிடுகிறார்.

வரமாலினி காட்டில் பதினாறு ஆண்டுகள் எவர் துணையுமின்றி தனியே வாழ்ந்து வருகிறாள்.

ஜயமாலினி இருநூறு பெண்களைக் காப்பாற்றி, தன்னுடன் அழைத்துச் சென்று, அவர்களுக்கு கல்வி புகட்டி பாதுகாத்து வருகிறாள்.

இங்ஙனம் புதினத்தில் வரும் பெண் களைத் திறமை வாய்ந்தவர்களாகவும், கல்வி, கேள்வியில் சிறந்தவர்களாகவும், வீரமிக்கவர் களாகவும், நுண்ணிய அறிவுக் கூர்மை கொண்டவர்களாவும் படைத்திருப்பதிலிரு ந்து ஆசிரியர் பெண் முன்னேற்றக் கருத்து களை உடையவர் என்பதும், அவற்றைத் தம் புதினத்தில் தெளிவுபட எழுதியிருக்கிறார் என்பதும் புலனாகிறது.

## பெண்களுக்கு வேண்டிய விடுதலை

பெண்களுக்குக் கல்வி கற்று அறிவார் ந்தவர்களாக ஆன போதும், நற்பண்புகள் இல்லையெனில் அவை விழலுக்கு இறைத்த நீர் போல விணாகி விடும். எனவே பெண்களுக்கு எழுதப் படிக்கத் தெரிந்தவு டன், அடுத்து அவர்களுக்கு அறநூல்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதன்மூலம் நற்பண்புகளும், ஒழுக்கமும் வளரும். இங்ஙனம் நற்பண்புகளும், கல்வி, கேள்வியும் பெற்ற பெண்களால் விளையும் நன்மைகள் மிகுதியாகும். ஆனால் அத்தகைய நன்மை களை அடைய விடாமல் பெண்களை வீட்டுக்குள் அடைத்து விடுகின்றனர்.

இதனை ஆசிரியர் தனது புதினத்தில்

***“இவ்வித நற்குணங்கள் நிறைந்த மகிளைகள் ஆதிகாலத்தில் அநேகமிருந்தனர். இக்காலத் தில் இந்தியா முழுவதும் தேடினாலும் ஸத்குணம், ஸ்வமதாபி மானம், பூர்ணவித் தை, வீரஹங்காரம் முதலியன நிறைந்துள்ள ஸ்தீரி ஒருவளாது அகப்படாள். ஒருவேளை யிருந்தாலும் அவள் பதி நரீரமணியின் தல்ல குணங் களை மூடிவைத்து ஒரு இருட்டறையல் தள்ளி பூட்டி வைப்பான். இதனால் அப்பெண் கற்ற வித்தையெல்லாம் வீணேயாம்.” என்று எழுதுகிறார்.***

இதனைத் தான் பாரதியார் **‘வீட்டுக் குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்’** என்று கூறினார். பெண்ணை வீட்டுக்குள் பூட்டி வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமே தவறாகும். இதனை மாற்ற நாம் முயல வேண்டும்.

## முடிவுரை

தமிழின் முதல் பெண் எழுத்தாளரான பண்டிதை விசாலாட்சி அம்மாள் வாழ்ந்த காலத்தில் பெண்கள் அடக்கு முறையை எதிர்த்து, இந்தியா முழுதும் பலரும் குரலெழுப்பத் தொடங்கியிரு ந்தனர். அதற்கேற்றவாறு இவரும் தனது புதினங் களில் பெண் மாந்தர்களை முன்னிறுத்தி எழுதி வந்தார். புதினங் களின் தலைப்பும், கதையின் முதன்மை மாந்தர்களும் பெண்க ளாகவும் இருந்தனர். ஆநந்தமஹிளா என்னும் இப்புதினத்தி லும் பெண்களே முதன்மை மாந்தர்கள் ஆவர். மேலும் பெண் முன்னேற்றக் கருத்துகள் பலவற்றைக் கருத்துப் புலப்பாட்டு உத்தியில் எழுதியு ள்ளார் என்பதும் தெளிவாகிறது.

## முதன்மை நூல்

1. **ஆநந்தமஹிளா,** (புதினம்) பண்டிதை விசாலாட்சி அம்மாள்

## துணைநின்ற நூல்கள்/இணைய தளங்கள்

1. மகாகவி பாரதியார் கவிதைகள், சக்தி காரியாலயம், சென்னை, 1958.
2. திருக்குறள் சில அரிய பதிப்புகள், சுந்தரமூர்த்தி, இ., மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
3. https://www.tamildigitallibrary.in/
4. https://www.tamilvu.org/